3-JAN 1956
MADRAS


நவநாகரீக யுவதிகளுக்கு

Regd. No. M 6207.

# கிராமோதயம்

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - ஆகஸ்ட் 15 * 1954 * விலை 1 அணா இதழ் 20

## "கிராமதானம்"

*10-7-'54தேதி முடிய அகில இந்தியாவிலுமாக சுமார் 50 கிராமங்கள் தமது நில மனைத்தையும் பூமி தான யக்ஞத்திற்காக கொடுத்துள்ளன. அவைகளில் சில முக்கியமானவைகளின், பெயரும் அவை இருக்கும் ராஜ்யம், ஜில்லா முதலிய விபரங்களும் கீழ்க் கண்டவாறாகும்.*

| ராஜ்யம் | ஜில்லா | கிராமங்களின் எண் | முக்கிய கிராமங்களின் பெயர் |
|---|---|---|---|
| உத்கல் | 1. கோராபுட் | 31 | 1 பூதனமுடா<br>2 முசுலாகுடா<br>3 கடாவாஹி<br>4 ஸுதாகுடா<br>முதலியன |
| | 2. கடக் | 1 | 1 மான்பூர் |
| | 3 சப்பல்பூர் | 1 | ........ |
| பீஹார் | 1. பலாமு | 12 | 1 கிரார்வாட்<br>2 ஸேன்ஹா<br>3 கர்யா 4 ரோங்தே<br>5 பர்ஹேட்டா<br>6 வஸ்வார் 7 சும்பா<br>8 கர்கட் 9 ஜோரி<br>10 பாகர்டீஹ<br>11 மாஜர் 12 வீர்வீர் |
| | 2. கயா | 3 | 1 மன்பர்<br>2 பன்ஸி பீகா<br>3 கேதல் பீகா |
| உத்திரப் பிரதேசம் | 1 ஹமிர்பூர் | 1 | 1 மங்கரோட் |
| | 2. சுல்தான்பூர் | 1 | 2 ஜமுவா மேற்கு |
| | மொத்தம்... | 50 | |

சர்வ சேவா சங்கம்,
கயா.
10—7—'54.

**கிருஷ்ணராஜ்மேத்தா,**
காரியாலய காரியதரிசி.

## சிதம்பரத்தில் சர்வோதய ஊழியர்கள் கூட்டம்

சென்ற 8-8-'54 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணிக்கு சிதம்பரம் காதி வஸ்திராலயத்தில் சிதம்பரம் தாலூக்கா சர்வோதய ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. சுமார் 120 ஊழியர்கள் கலந்துகொண்டனர். தமிழ்நாடு பூமிதான யக்ஞ கமிட்டியின் கன்வீனர் ஸ்ரீ ச. ஜெகந்நாதன் அவர்களும், தென் ஆற்காடு ஜில்லா பூமிதான யக்ஞ கமிட்டி கன்வீனர் ஆத்திப்பாக்கம் ஸ்ரீ ராம கிருஷ்ண ரெட்டியார் அவர்களும் கூட்டத்திற்கு விஜயம் செய்து ஊழியர்களுக்குத் தகுந்த வழி காட்டி ஆலோசனை கூறினார்கள். கூட்டம் சிதம்பரம் தாலூக்கா பூமிதான யக்ஞ கமிட்டித் தலைவரும், காங்கிரஸ் கமிட்டித் தலைவருமான ஸ்ரீ எல். எஸ். சுப்பராயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வரும் 15-8-'54 தேதிய சுதந்திர தின விழா முதல் ஒரு வாரத்திற்கு தாலூக்கா பூமிதான யக்ஞ கமிட்டி கன்வீனர் திரு. சுப்பராயப்பிள்ளை அவர்கள் தலைமையில் சிதம்பரம் தாலூக்காவில் சுமார் 20 கிராமங்களில் பூமிதான யாத்திரை செய்வதென்றும், அந்த யாத்திரையில் தமிழ் நாட்டின் சர்வ சேவா சங்க பிரதிநிதி திரு. அ. பாலகிருஷ்ணபிள்ளை அவர்களும் கலந்துகொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. அதே போல் திருக்கோயிலூர் கிளையிலிருந்து 22-8-'54 தேதி முதல் ஒரு வாரமும், கூடலூர் கிளையிலிருந்து 29-8-'54 தேதி முதல் ஒரு வாரமும் இரண்டு கோஷ்டிகளாக பூமிதான யாத்திரை துவக்கி நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களில் மற்ற கிளைகளிலிருந்து பிரதிவாரமும், விடுமுறை தினங்களில் பூமிதான யாத்திரை செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் சிதம்பரம் ஆரம்ப ஆசிரியர் ஸ்ரீ தியாகராஜ அய்யர் அவர்கள் மாதத்தில் ஒரு நாள் உழைப்பு தானமும், மாதம் தனது குறைந்த வருமானத்திலிருந்து ஒரு ரூபாய் சம்பத்தி தானமாகவும் தருவதாக வாக்களித்தார்.

கூட்டத்திலிருந்து சுமார் 20 ஊழியர்கள் யாத்திரையில் கலந்துகொள்வதாக வாக்களித்தனர்.

சிதம்பரம் திரு. ராமச்சந்திரன் அவர்கள் தாலூக்கா பூராவும் பூமிதான யக்ஞ யாத்திரைக்கு "ஒலிபெருக்கி" சாதனம் இலவசமாகக் கொடுப்பதாகவும் வாக்களித்தார், — **அ. பாலகிருஷ்ணன்.**

## மண்டபம் மரைக்காயரின் தர்ம சிந்தனை

மண்டபம் மகாத்மா கிராமோதய கதர் சங்கத்தின் சார்பில் காரியதரிசி ஸ்ரீ எம். செல்லையா அவர்களின் முயற்சியால் 26-7-'54ல் ஷை சங்க கட்டிடத்திற்கு முன்னிலையில் பாம்பன் தடிசைத் தொழில் அபிவிருத்தி சங்க தலைவர் ஜனாப் கே. ஓ. என் பக்ருதீன் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்பொதுக்கூட்டத்தின்போது ஷை மண்டபம் பிரமுகர் ஜனாப் பி. ஆர். எம். கே. முகமது அப்துல் ரஹிமான் மரைக்காயர் அவர்கள் அங்கு ஓர் பிரசவ விடுதி கட்டுவதற்கென 5 ஏக்கர் நிலமும் ரூ. 10,000மும் இலவசமாக கொடுத்துதவ வாக்களித்துள்ளார்கள்.

ஷை மரைக்காயர் அவர்களுடைய பெருந்தன்மையையும், தாராள உள்ளத்தையும் தர்ம சிந்தனையையும் கண்டு மகிழ்ச்சி அடைவதோடு இன்னும் பல பொது நல காரியங்களுக்கும் உதவி செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

இதேபோன்று நாட்டில் ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள பொருளுக்கும் பூமிக்கும் தான் சொந்தக்காரனல்ல, அனைத்தும் ஆண்டவனுடையது. ஆகையால் ஆண்டவனின் கட்டளைப்படி நடந்துகொள்வதுதான் சரி என உணர்ந்து தனது உரிமையை விட்டுக்கொடுத்தார்களானால் வினோபாஜி அவர்களின் பூதான இயக்கம் வெற்றியடைந்து பல பிரச்னைகளும் தீர்ந்து நல்லதோர் நிலைமை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை

— **எம். சுயம்பிரகாசம்**

3-JAN 1956



கிராமோதயம்

ஆகஸ்ட் 15 1954

# நவநாகரீக யுவதிகளுக்கு

**அழகில் அன்பு மறைந்துவிடுகிறது**

சென்ற மூன்றுண்டுகளில், தேசத்தின் எல்லா ராஜ்யங்களிலும், பெண்களுக்கு ஸ்தாபனங்களில் சேவை செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. பெண்கள் உள்ளத்தில் அன்பும், இரக்கமும் அதிகமிருக்கிறதென்ற ஒரு பிரமை, சமூகத்தில் பொதுவாகவும் குறிப்பாக பெண்களிடையேயும் வெகு நாட்களாக நிலவி வந்திருக்கிறது. ஆனல் அனுபவத்தில் பெண்களிடம் அழகும், பீதியும் தான் அதிகம் இருப்பதாக தெரிகிறதேயல்லாது அன்போ, இரக்கமோ விசேஷமாக இருப்பதாகத் தெரியவில்லை. அழகில் தைரியம் மறைந்துவிடுகிறது. பீதியில் அன்பும், கருணையும் மறைந்துவிடுகின்றன.

**ஆண்களின் தாய்மார்கள் அன்பின் மூர்த்திகள்**

அப்படியானல் பெண்கள் மனதில் அன்பும், ஆதுரமும் இல்லவே இல்லையா? இல்லை, பெண்கள் தங்களை ஆண்களின் தாய்மார்களாக எண்ணும்பொழுது, அன்பிற்கும் வீரத்திற்கும் உறைவிடமாகின்றனர். ஆனல் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் தங்களை ஆண்களுக்கு தாய் அல்லது சகோதரியாகக் கருதத் தவறுகின்றனர். அதனல் அவர்கள் எப்பொழுதும் ஆண்களால் சந்தேகிக்கப்பட்டு, பூசல்களுக்கு பாத்திரமாகின்றனர்.

**வரதட்சிணை படித்த பெண்களுக்கும் உண்டு**

ஆகையால் பெண்கள் கல்வி பெற்றதிலுலோ வாக்குரிமை பெற்றதிலுலோ, அவர்கள் வாழ்க்கையில் எவ்விதமான அடிப்படை மாறுதல்களும் ஏற்படவில்லை. வரதட்சிணை என்று திருமண பீஸாக படித்த லேடிடாக்டர்கள், பேராசிரியைகள், பெண் கௌன்ஸிலர்கள், அரசியல், சமூகத் தலைவிகளிடமிருந்தும் பணம் பெற்றுத்தான் வாலிபர்கள் அவர்களை திருமணம் செய்துகொள்கின்றனர்! கல்வி, பெருமை, வாக்குரிமைகளால், நன்கு அலங்கரிக்கப்பட்ட அழகிய மங்கையர்களின், ஆத்மதானமும் அவ்வாலிபர்களுக்குக் கிடைக்கிறது. அழகும், கல்வியும், குணமும், பொருந்திய பெண்கள் எப்பொழுதும் தங்களுக்கொத்த குணம் படைத்த கணவர்களைத் தேடுகின்றனர்! ஆற்றலும் அறிவும் படைத்த வாலிபன் அதிகத்திலும் அதிகம் வரதட்சிணையை எதிர்பார்க்கிறன்!!

**திருமணம் ஒரு வியாபாரம்!**

பெண்களின் தாய்தந்தையர்கள் 50 ஆண்டுகளுக்கு முன் எவ்வளவு கவலையில் ஆழ்ந்திருந்தனரோ அவ்வளவு இன்றும் வியாகூலமடைகின்றனர். முன்காலத்தைக் காட்டிலும் இன்று அவர்களுடைய துயரம் இன்னும் அதிகரித்துவிட்டதாகவே சொல்லவேண்டும். கல்வி கற்ற பெண்ணின் நோக்கும் போக்கும் விசேஷ தன்மை படைத்தது. அதைப் புறக்கணிக்க பயப்படுகின்றனர். படித்த வாலிபன் மற்ற உலக விவகாரங்களைப் போல் திருமணத்தையும் ஒரு வியாபாரமாகவே கருதுகிறன். அதாவது அவன் பெண்ணின் பிரதிகூலமான சூழ்நிலையையும், திருமணமாகவேண்டும் என்ற ஆவலையும், சாத்தியமானவரை தனக்கு பயனளிக்கும் முறையில் சுரண்ட வேண்டும் என்று எண்ணுகிறன். இம்மாதிரி இருக்கையில் ஆண்களோடு, பெண்கள் சரிநிகர் சமானமாவது எப்படி சாத்தியமாகும்?

**அரசியல் பெண்கள் வாழ்க்கையில் முரண்பாடு!**

பள்ளிக்கூடங்களிலும், காலேஜ்களிலும் படிக்கும் பெண்கள் சோஷலிஸ்டுகளாகவோ, கம்யூனிஸ்டுகளாகவோ, சர்வோதயவாதிகளாகவோ தங்களை நினைத்துக்கொள்கின்றனர். தாழ்த்தப்பட்ட, ஏழை மக்களின் துயரத்தைப்பற்றி அழகாக சொற்பொழிவாற்றுகின்றனர். சுரண்டுபவர்களையும், பணம் படைத்தோரையும் வன்மையாகக் கண்டிக்கின்றனர்! ஆனல் தங்கள் திருமணம் மட்டும் ஏதாவதொரு செல்வந்தரின் குடும்பத்தில் ஆகவேண்டும் என்ற விருப்பம் எப்பொழுதும் அவர்களிடம் இருந்துவருகிறது. அவர்கள் தாய்தந்தையர்களும் தங்கள் குமாரியின் எதிர்கால சுகத்தை வேண்டுவதால், பணம்படைத்த வரனையே இப்பெண்களுக்காகத் தேடுகின்றனர். இன்றைய பெண்களின் வாழ்க்கையில் இது ஒரு முரண்பாடாகும்! ஆகையால் கல்வியும், உரிமையும், அதிகாரமும் அவர்களுடைய வாழ்க்கையின் ஆபரணங்களாகின்றன. இந்த அலங்கார அணிகள் எவ்வளவுக்கெவ்வளவு விலை உயர்ந்ததாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு, உயிருக்காபத்தாகவும் இருக்கிறது!

**பெண்கள் தங்கள் கடமைகளை தட்டிக்கழிக்கின்றனர்!**

அப்பொழுது பெண்கள் தமது உரிமைகளைக் கைவிட்டுவிடுவதா? அல்லது கல்வி பெறுவதை நிறுத்திவிடுவதா? மீண்டும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதா?

விசித்திரம் என்னவென்றுல், தங்கள் நவநாகரீக மோகங் காரணமாக ஏமாற்றமடைந்து மேற்கூறியவாறே செய்கின்றனர். சுதந்திரத்திற்கு சங்கடமான சமயத்தில்தான் சோதனை ஏற்படுகின்றது. சங்கடங்கள் நேரும்பொழுதெல்லாம், தன்னைக் காப்பாற்றும் பொறுப்பை ஆண்களிடம் ஒப்புவித்துவிட்டு, பெண்கள் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழித்துவிடுகின்றனர்! ஆண்மகன் அவர்களைப் பாதுகாக்க இயலாவிடில் அவனுடைய ஆண்மைக்கு களங்கமேற்படுகிறது.

**பெண்மையின் கௌரவம் மாய்ந்துவிடுகிறது!**

எங்காவது விதிவிலக்காகக்கூட ஒரு பெண் தனது சாகசத்தை வெளியிட்டாலோ, உலகம் அவளை அடக்கமில்லாதவள் என்று தூற்றுகிறது! இதில் ஆண்களின் கௌரவம் இருக்கிறது! அவன் வாழ்க்கையின் மதிப்பு உயர்ந்துவிடுகிறது. ஆனல் பெண்களின் வாழ்க்கை மதிப்பு இதன் காரணமாக வருந்தத்தக்க அளவு வீழ்ந்துவிடுகிறது! பெண்களுக்கு, பெண் என்ற ஹோதாவில் கௌரவமோ, மதிப்போ இல்லாமல் போய்விடுகிறது!

**ஆண்மைக்கு பெண்கள் அடிமையாகிவிட்டனர்!**

பெண்கள் பீதியும், அழகும் பொருந்தியவர்கள்; கோழைத்தனமும் நாசூக்கும் உடையவர்கள்; ஆகையால் அவர்கள் மனதில் சரீரபலத்திற்கும், ஆட்சி அதிகாரத்திற்கும் விசேஷமான மரியாதை இருக்கின்றது. பிறரை சரீரபலத்தால் வென்று, அவர்கள்மீது தங்கள் மேலதிகாரத்தைச் செலுத்தக்கூடிய வீர புருஷர்களிடம் பெண்கள்

தங்களுடைய யாவற்றையும் அர்ப்பணம் செய்து ஆடவர்களை பூஜை செய்கின்றனர். பெண்கள் இம்மாதிரி உடல் வன்மைக்கும், அதிகாரத்திற்கும் அடிமைகளாகிவிட்டனர்.

**சுதந்திர நபர்களாக மதிக்க நிலை மாறவேண்டும்**

இந்த நிலைமை நீடிக்கும் வரை அவர்கள் பர்தாவுக்கு உள்ளிருந்தாலும் சரி, வெளியிலிருப்பினும் சரி, இரு இடங்களிலும், பெண் ஒரு ஆபத்து அல்லது சம்பத்து அல்லது ஒரு கருவியாகத்தான் இருக்கமுடியும்; ஒரு சுதந்திரமுடைய நபராக இருக்க முடியாது!

**நிலை மாற வழிகள்—உடல் வலிமையை மதியாதீர்கள்; பயத்தை ஒழியுங்கள்!**

இந்நிலையை மாற்ற புதிய வாழ்க்கை மதிப்பீடுகளைப் பெண்கள் ஏற்பதுதான் ஒரே வழியாக இருக்கின்றது. பெண்கள் தம் மனதிலிருந்து உடல்வலிமைக்கு வைத்திருக்கும் மரியாதையையும், பீதியையும் அகற்றவேண்டும். இன்று பெண்களிடம் செல்வத்தின்பாலும், பணத்தின்பாலும் மோகம் ஆண்களைக்காட்டிலும் அதிகம் குடிகொண்டுள்ளது. ஆண்களின் வாள் பெண்களைக் காப்பதற்கும், அவர்கள் செல்வம் பெண்களுக்கு சுகவாழ்வளிக்கவுமே இருக்கின்றன. ஆகையால் பெண்களுக்கு ஆயுதங்களிடத்திலும், பணத்திடமும் பெரும் பற்றுதல் இருக்கிறது. இந்த ஆயுதப் பற்றும், பணப்பற்றும் நவநாகரீகப் பெண்களிடம், புராண காலத்திய பெண்களிடமிருந்ததைக் காட்டிலும் அதிகமாகவே காணப்படுகின்றன.

**ஆயுதப் பற்றும், ஆடம்பரப் பற்றும் இல்லாத பெண்மையே பெண்மை!**

ஆயுதமற்ற தைரியத்தையும், செல்வமற்ற கௌரவத்தையும் இரு விதங்களாக பெண்களுக்கு காந்தியடிகள் அளித்தார். சத்தியாக்கிரஹத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமானமான தைரியத்தையும், பராக்கிரமத்தையும் காண்பிக்க முடியும். ஏனெனில் இதற்கு உடல்வலிமை தேவையில்லை.

**உழைப்பின் அடிப்படையில் புது சமூகம்!**

உழைப்பை ஆதாரமாகக்கொண்ட செல்வக் குவியலற்ற ஒரு சமூக அமைப்புக்கு ஒரு புதிய பொருளாதார இயல்பை காந்தியடிகள் வகுத்தருளினர். பயனுள்ள உழைப்புக்கும், கைத்தொழில் திறனுக்கும், கலைவளர்ச்சிக்கும் பெண்கள் போதிய நிபுணத்துவம் அடைய முடியும்.

காந்தியடிகளின் "சர்வோதயம்" ஒரு எல்லாம் நிறைந்த வாழ்க்கைக் கோட்பாடுகளைத் தரும் விஞ்ஞானமாகும். அவை வாழ்க்கை மதிப்பீடுகளையே ஆதியோடந்தம் மாற்றிவிடுகின்றன.

இன்று வரை சமூகம் ஆண்களின் வலிமையை ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. அதனால் அந்த சமூகத்தின் மதிப்பீடுகளும் ஆண்களுக்கு அனுகூலமாக இருந்துவருகிறது. "சர்வோதயம்" இந்த சமூகத்தை கொடைவலிமையையும், ஆண், பெண் சமத்துவ சக்தியையும், மனித பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டதாக்க விரும்புகிறது.

தேசத்தின் கல்வி கற்ற பெண்மணிகளின் பரிசீலனைக்காக இந்த விஷயத்தை மனப்பூர்வமாக வெளியிட்டிருக்கிறேன்.

—தாதா தர்மாதிகாரி.

## சிதம்பரம் கதர் ஊழியர்கள் கூட்டம்

சென்ற 8–8–'54 ஞாயிற்றுக்கிழமை காலை சிதம்பரம் காதி வஸ்திராலயத்தில் வட ஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லா கதர் தொண்டர்கள் கூட்டம் நடைபெற்றது. காலை பிரார்த்தனை, நூற்பு யக்ஞத்துடன் சுமார் 9 மணிக்கு ஆரம்பித்த கூட்டம் பிற்பகல் சுமார் 2 மணி வரை நடந்தது.

வரும் ஆகஸ்டு 15-ந்தேதி முதல் அக்டோபர் 2-ம்தேதி வரை நடைபெறவிருக்கும் சர்க்கா ஜயந்தி காலத்தில் சர்க்கா சங்க ஊழியர்கள் 'பூதானயக்ஞ' இயக்கத்தில் தீவிரமாக பங்கு எடுத்துக்கொள்வதென்றும், அந்நாட்களில் வாரந்தோறும் கிராமங்களுக்கு சென்று பூமிதானயக்ஞ பிரச்சாரமும், சர்வோதய தத்துவ நூல்கள், கிராமோதய கதர் சங்க அமைப்பு முதலிய வேலைகளில் தீவிர கவனம் செலுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வருடம் சர்க்கா ஜயந்தி, தீபாவளி காலத்தில் சென்ற ஆண்டு செய்யப்பட்ட கதர் சில்லரை விற்பனையைக் காட்டிலும் இருமடங்கு கதர் விற்பனை செய்ய திட்டமிட்டு, கிராமங்களில் பிரசார மூலமும், தெரு விற்பனைமூலமும் ஏற்பாடு செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

கிளைகள்தோறும் குறைந்த பட்சம் இரண்டு புது கதர் விற்பனை ஏஜன்ஸிகளும், இரண்டு கிராமோதய கதர் சங்கங்களும் ஏற்படுத்தி நடத்துவதென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

சர்வோதய கருத்துக்களை பரப்பும்பொருட்டு 'கிராமோதய'த்தை அதிக கிராமங்களில், அதிக நபர்களிடம் பரவச்செய்வதற்கு குறைந்தபட்சம் ஆகஸ்டு 15-முதல் அக்டோபர் 2-ம்தேதி வரை தினந்தோறும் ஒவ்வொரு புது சந்தாதாரரையாவது சேர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்திற்கு மற்ற நண்பர்களுடன் தமிழ்நாட்டு பூமிதான கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ச. ஜகந்நாதன் அவர்களும், தென் ஆற்காடு ஜில்லா பூமிதான யக்ஞ கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ராமகிருஷ்ண ரெட்டியார் அவர்களும் வந்திருந்து ஆலோசனையளித்தார்கள்.

கதர், கிராமக் கைத்தொழில் போர்டாரின் கிராமக் கைத்தொழிலபிவிருத்தித் திட்டங்களில் வேப்பெண்ணை தயாரித்தல், அதன் மூலம் சோப் தயாரித்தல், கைக்குத்தரிசி தயாரித்து, விநியோகம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் தொழில்கள் தோற்றுவித்தல், சிறுகைத்தொழிலாக தீப்பெட்டி தயாரித்தல், செக்கில் சுத்தமான எண்ணை ஆட்டுதல் முதலிய பல கைத்தொழில்களை கிராமங்களில் பரப்புவதற்கு கிராமோதய கதர் சங்கங்கள் ஸ்தாபிதம் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

— கே. எஸ். கோவிந்தசாமி.

## 1954-55 வருடம் தமிழ்நாட்டில் கதர் வேலைத்திட்டம்

சென்ற ஏப்ரல் மாதம் நடப்பு வருடத்தில் நமது சென்னை ராஜ்யத்தில் 85 லக்ஷம் ரூபாய் பெருமானமுள்ள கதர் தயாரிப்பதென்று சர்வ சேவா சங்கம் தீர்மானித்திருந்தது. அதை சென்ற ஜூன் மாதம் சூழ்நிலைக்கேற்ற மாறுதல்கள் செய்யும்பொருட்டு தற்காலிகமாக ரூ. 50 லக்ஷம் பெருமானமுள்ள கதர் மட்டும் தயாரிப்பதற்கு திட்டமிட்டு வேலை செய்வதென்றும் அடுத்த மூன்று மாதங்களுக்குப்பின் நிலைமைக்கேற்ற மாறுதல் செய்து உற்பத்தியைப் பெருக்கலாமென்றும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

— அ. பாலகிருஷ்ணன்

3-JAN 1956 MADRAS



# பிரதம மந்திரி பதவியை ஏன் துறந்தேன்?

**[இஸ்ரேல் ராஜ்யத்தின் முன் நாள் பிரதமர் திரு. டேவிட் பென் கூறியன், தாஞகவே தன் பதவியைத் துறந்து ஒரு விவசாயியாக வாழ்க்கை நடத்தி வருகிறார். அவர் கி. பி. 1886ம் ஆண்டில் போலந்து தேசத்தில், பிளான்ஸ் என்ற குக்கிராமத்தில் பிறந்தார். 1906ம் ஆண்டில் பாலஸ்தீனில் குடியேறினார். 1948ம் ஆண்டில் இஸ்ரேல் ராஜ்யம் தோன்றிய பொழுது அவர்தான் அதன் முதல் பிரதமரானார். அவர் பதவி காலத்திலும் அவர் வாழ்க்கை எளியதாக இருந்தது.**

**வன்மைமிக்க ஒரு புது ராஜ்யத்தின் பெரும்பாலோர் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் ஒரு உயர்ந்த லட்சியத்திற்காகத் தனது பதவியை விட்டு விலகியிருப்பதை நோக்குமிடத்து நம் நாட்டில் பொது வாழ்வில் பலர் அதிகார ஆதிக்க வெறி பிடித்து ஆயுள் பூராவும், கிடைத்த பதவியைக் கைவிடாமலும், புதுப் புது பதவிகளைக் கைப்பற்றவும், செயலாற்றிவரும் அவகுணத்தைக் கண்டு நாம் தலைகுனியாமலிருக்க முடியவில்லை! — ஆசிரியர்]**

### ஏன் துறக்க வேண்டும்?

"எனது மந்திரி பதவியை துறப்பதற்கு முன் பெருவாரியான வாக்குகளால், தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு ஜனநாயகத் தலைவர் தனது பதவியில் நீடித்திருப்பது நியாயமா என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. மிகவும் அதிகமான பொது ஜன ஆதரவும், காரியசக்தியும் இருந்த பொழுதிலும் தேசத்திற்கும், தனி நபருக்கும் இது நேரான பாதையா? இம்மாதிரி கேள்விகளுக்கு பதிலளிப்பது கடினம். ஆனல் அதிகாரத்தை மக்கள் சேவைக்கொரு கருவியாக மதிக்கின்ற எல்லா அரசியல்வாதியும், இக்கேள்விகளைப்பற்றி கம்பீரமாக சிந்தனை செய்வார்கள். சிந்தனை செய்யும்பொழுது கால தேச ஸ்திதியையும், தன் விருப்பு வெறுப்புகளையும், தன் திறனையும் சீர் தூக்கிப் பார்ப்பார்கள்.

### மந்திரி ஆனேன்

1948-ம் ஆண்டு மே மாதம் 14-ந்தேதி இஸ்ரேல் ராஜ்யம் உதயமாயிற்று. நான் அதன் பிரதம மந்திரியாக சென்ற ஐந்தாண்டுகளாக இருந்து வந்தேன். தேச மக்களில் பலர் இது என் வெற்றியாகவும் பெருமையாகவும் பாராட்டத் தொடங்கினர்கள்.

### ஒருவனல் ஒன்றும் ஆகாது

ஆனல் அந்த எண்ணம் முற்றிலும் தவறு என்று நான் எண்ணுகிறேன். ஏனெனில் ஒரு ராஜ்யத்தை தோற்றுவிப்பதும், அதை வளர்ப்பதும், அதை பாதுகாப்பதும், எவ்வளவு திறமைசாலியான பெரிய மனிதர்கள் ஆயினும், ஒரு மனிதனல் செய்ய முடியாத காரியங்கள் என்று பிறரைக்காட்டிலும், நான் நன்கு அறிவேன். வேலையை பூர்த்தி செய்ய சிரத்தையும் உறுதியும் வாய்ந்த லக்ஷக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் ஒத்துழைப்பு அவசியமாகிறது.

### துறவுக்குக் காரணம்

தேச மக்களுக்கு எனது தலைமை தேவை என்பதை நான் அறிந்துதான், ராஜ்ய நிர்மாணத்திற்கு முன்பும், பின்பும் அவர்களை தலைமை தாங்கி வழி நடத்திச் சென்றேன். ஆனல் இப்பொழுது தேசத்தின் நலனுக்காகவும், எனது சொந்த நலனுக்காகவும், மந்திரி பதவியைத் துறப்பது அவசியம் என்று கருதுகிறேன். என் முடிவுக்கு காரணங்கள் இஸ்ரேல் தேசத்தோடு தொடர்புடையது. வேறு தேசங்களுக்கும் இவை பொருந்தக்கூடும்.

### ஆத்ம சக்தியும் தேசப்பற்றும் ஓங்க......

எல்லா தேசங்களும், அந்நாட்டு மக்களிடையே ஆத்ம சக்தியை வளர்த்து, தேசத்தின் பால் அவர்களுக்குள்ள பொறுப்பை உணரும்படி செய்ய வேண்டும். ஏதாவது ஒரு விசேஷ நபரையோ, அல்லது விசேஷ கூட்டத்தினரையோ தேசமென்று கருதுவதால் கம்பீரமான அரசியல் ஆபத்துக்களும், அநீதிகளும் தோன்றக் கூடும்.

### மனிதன் தேசமாக மாறுகிருன்!

மனிதன் எத்தனை பொது ஜன ஆதரவு பெறுகிருனே அவ்வளவுக்கவ்வளவு மக்களின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகிருன். இதன் பயனுக அவனையே தேசமாகக்கருதி, அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்க்க அவனையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் பொறுப்புடைய பிரஜைகளாவதற்கு இது ஒரு முட்டுக்கட்டையாகும்.

எத்தனை பெரிய மனிதரானுலும் சரி ஒரு தனி நபர் இன்றி உலகம் நின்றுவிடாது! ஆகையால் எந்த நிலையிலும் சரி, விசேஷமாக தேசத்திற்கு இதனல் பெரிய நஷ்டமெதுவும் ஏற்படாதென்றல், அரசியல் வாதிக்கு அரசியல் பதவியிலிருந்து விலகிவிடுவதுதான் நலம்.

### இரண்டு காரணங்கள்

நான் இரண்டு காரணங்களுக்காக எனது பதவியைத் துறந்தேன். இந்த வேலைகளை நான் எனது மந்திரி பதவி இருக்கும் வரை செய்ய முடியவில்லை. (1) விவசாயம் (2) புத்தக ஆராய்ச்சி.

### இயற்கை எழில் நிறைந்த இன்ப வாழ்க்கை

மனிதன் இயற்கையான எழிலோடு வாழ்வதுதான் நலமளிக்கும் என்று நான் கருதுகிறேன். தற்சமயம் காணப்படும் நாகரீகத்திற்கு நான் பெருமை யளிக்கிறேன். ஆனல் மனிதன் இந்த நாகரீகத்திலிருந்து எவ்வளவு தூரம் விலகி நிற்கின்ருனே அவ்வளவுக்கவ்வளவு அவன் மனித ஜன்மம் பெற்றதின் பெருமையை உணருவான். அவ்வளவுக்கவ்வளவு தனது வாழ்க்கையையும் பயனுள்ளதாக்குவான்.

கடவுளால் ஆக்கப்பட்ட காடுகள், மலைகள், பாலைவனத்தின் மத்தியில் நிற்கும்பொழுது, மேற் கூறிய எண்ணங்கள் தீவிரமடைகின்றன.

**[ From 'Isreal News' ]**

— **டேவிட் பென் கூறியன்.**
(Ex-Premier of Isreal.)

*(இந்தப் பத்திரிகை கையினுல் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)*

## இந்த இதழில்


| | |
|---|---|
| கிராம தானம் | 85 |
| சிதம்பரத்தில் சர்வோதய ஊழியர்கள் கூட்டம் | 85 |
| நவநாகரீக யுவதிகளுக்கு | 86 |
| சிதம்பரம் கதர் ஊழியர்கள் கூட்டம் | 87 |
| 1954–55 வருடம் தமிழ் நாட்டில் கதர் வேலைத் திட்டம் | 87 |
| பிரதம மந்திரி பதவியை ஏன் துறந்தேன்? | 88 |


"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0–1–0 வருட சந்தா ரூ. 1–8–0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.
Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.